# தமிழா எழுச்சிகொள்.



பெருஞ்சித்திரனர்

# நாருசிரியம்

பாட்டு: கக

அன்பெனப் புகழ்கோ! அருளென மகிழ்கோ!
என்கொல் பாகர்க் கிடுகறி யென்னு
அறிந்திசின் போதந்த ஏவலற் கெம்மனைப்
பாகற் பசுங்காய்ப் புளிக்குழை யட்டுத்
தாய்தர மிசைந்த தகவுரைத் தெங்கோ
அதுநயந் தருந்தா ராகலின் அதுமற்றுப்
பிறகொளக் கூறுகோ வென்றலு மவன்மீண்டுப்
பெய்துகத் தந்த திவக்காண்; முழுத்தும்
பைம்பருக் கொழும்புடை பாகல்;
ஐதகைக் கென்யான் நோற்ற வாறே!

*தலைவன் மாட்டுக்கண்ட சிறந்ததோர் அன்பு நிகழ்ச்சியைத் தோழிக்குக் கூறி, அவன் தன்பால் கொண்ட பரிவை அன்பென்று புகழ்தல் தகுமோ, அருளென்று மகிழ்தல் தகுமோ? என்று வியந்தும் அத்தகையானை இல்லறத் தலைவனாக அடையப் பெறற்கு யான் நோற்ற தவத்தின் அளவுதான் என்னை? எனப் பெருமிதம் படவு தலைவி கூறுவதாக அமைந்ததிப் பாடல்.*

*இது புறப் பொதுவியல் என்திணையும் கற்பு முல்லை என் துறையுமாகும்.*

# தமிழா எழுச்சிகொள்

(கட்டுரைத் தொகுப்பு)

தமிழின நலங்கருதி அவ்வப்பொழுது 'தென் மொழி'யில் வெளிவந்த பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் ஆசிரியவுரைகள் 'தமிழா எழுச்சிகொள்' தலைப்பில் நூலாகத் தென்மொழி அன்பரும் தனித்தமிழ்ப் பற்றுள ரும் ஆகிய திருப்பூர் திரு. க. வெள்ளிமலை (வெள்ளியங்கிரி) செல்வி தாமரை (பத்மாவதி) ஆகியோர் திருமண விழாவில் வெளியிடப் பெறுகிறது. திருமண மங்கல விழாவின் அன்புப் பரிசாக இதனை அச்சிட்டு வழங்குவித்த மணமகன் திரு. க. வெள்ளிமலை அவர்களுக்கு நம் பாராட்டும் நன்றியும் உரியவாகுக.

அன்பன்,

தென்மொழி. ந. முத்துக்குமரன்.

பெருஞ்சித்திரனார்.

தமிழா எழுச்சிகொள்.
முதற்பதிப்பு: துலை, கச, தி. பி. உ0க0 (31—10—79)
அனைத்துரிமைகளும் ஆசிரியர்க்கே.

விலை : 75 காசு

(இந்நூலையோ, நூற்பகுதியையோ
எவ்வகையாலும் பயன்படுத்திக்கொள்ள
ஆசிரியர் ஒப்புதல் பெறுக.)

பதிப்பாசிரியர்:
தென்மொழி. ந. முத்துக்குமரன்.

அச்சிட்டோர்:
முத்துக்குமார் அச்சகம்
பல்லடம்-638664

# பெரியார் பிறந்தார்; பிறந்தது உள்ளொளி!



'பெரியார் நம்மிடைப் பிறந்திரா விட்டால்
நரியார் நாயகம் இங்கே நடந்திடும்!
திரியாத் தமிழ்க்கும் திகழ்நா டதற்கும்
உரியார் நாமெனும் உண்மை, பொய்த்திருக்கும்!
ஆரியர்க் கின்னும் அடியராய்க் கிடப்போம்
பூரியர் புராணப் புளுகுக் குப்பையுள்-
சாதிச் சகதியுள் - சமயச் சேற்றினுள்-
புதையுண் டிருப்போம்! புழுக்களாய் மேய்வோம்!
சிதைவுற் றிவ்வினம் சிதறுண் டிருக்கும்
பெரியார் பிறந்தார்! பிறந்தது உள்ளொளி!
அரியார் நாமெனும் ஆக்கமும் சிறந்ததே!

# பெரியார் நூற்றாண்டு நினைவுகள்

பெரியார் பிறந்து ஒரு நூறாண்டு ஆகிறது. தமிழகமும் மற்றும் தமிழர்கள் வாழும் உலக நாடுகளில் உள்ள பகுதிகளும் அவர் நூற்றாண்டு விழாவைப் பெருமையுடன் கொண்டாடுகின்றன. தமிழர் உள்ளங்களிலெல்லாம் அவரைப்பற்றிய ஒரு நன்றியுணர்வு நிறைந்திருக்கின்றது. மிகப்பெரிய ஒரு நாகரிக இனமான தமிழ் இனத்தைக் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக அடிமைப்படுத்தி வந்த ஆரியத்தின் நச்சுவேரை அகழ்ந்து அகற்றுவதில், அவர் போராடிய முயற்சிகள் இவ்வுலகம் உள்ளளவும், இதில் வாழும் தமிழினத்தவர்களால் நன்றியுடனும் பெருமையுடனும் நினைக்கப்படும்.

அவர் செய்த முயற்சிகள், போராடிய போராட்டங்கள் பேசிய பேச்சுகள், நடந்த நடைகள் ஆகிய அனைத்தும் இத்தமிழினத்திற்கு முழுவதுமாகப் பயன்பட்டன. அரசியல் நிலைகளில் தமிழினத்திற்கு அவர் பெற்றுத்தந்த உரிமை உணர்வுகளும், குமுகாய நிலையில் அவர் மீட்டுக் கொடுத்த தன்மான உரிமைகளும், ஒடிந்து போய் வீழ்ந் திருந்த தமிழினத்தின் முதுகெலும்பை நிமிர்த்து, எல்லா இனத்தைப் போலவே நடையிட வைத்தன. அவர் வெறும் ஒரு கட்சியின் தலைவராக இருந்து பணிசெய்ய வில்லை. அவர் உலகெங்கணும் பரந்துபட்டு வாழ்ந்த ஒரு பேரினத்தின் பெருமைமிக்க ஒரு பண்டையினத்தின் தலைவராகவும், ஒரு காலத்தின் தலைவராகவும் இருந்து மக்களுக்கு வழிகாட்டினார்; அவர்களை வழிநடக்கச் செய்தார்,

மற்றும் மூடநம்பிக்கைகளாலேயே நிரப்பப் பெற்றிருந்த கடந்த மூவாயிரமாண்டுக் காலத் தமிழினத்தின் அறிவுக் கண்களைத் திறந்துவிட்ட பெருமை பெரியார் அவர்களையே சாரும். திருவள்ளுவருக்குப்பின், மக்கள் இனத்தை அளாவி எண்ணிய ஒரே தலைவர் பெரியார் தாம். காந்தியடிகளார் கூட ஓர் இனத்தையும், ஒரு மொழியையும், சில மூடக்கொள்கைகளையும் தம் பொது நலத் தொண்டின் எல்லையாக வகுத்துக் கொண்டார். ஆனால் பெரியார் தம் பேச்சிலும், எழுத்திலும், தமிழர்கள் பகுத்தறிவு என்று நொடிக்கு நூருயிர முறைகள் கூறினாலும், அவர் தாம் எடுத்துக்கொண்ட கொள்கைகளில் மக்கள் அனைவரையுமே உள்ளடக்கினர். தனிப்பட்ட ஓரினத்திற்காக அவர் வாழ்ந்ததுபோல் தோன்றினாலும், ஓர் எல்லைக்குட்பட்ட மக்களுக்காகவோ, அல்லது ஓர் இன மக்களை மட்டும் எதிர்த்தோ, அவர் போராட்டம் நிகழ்த்தியதாகக் கொண்டுவிட முடியாது. அவர் போராட்டமும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் நடைபெற்றதாகக் கூறமுடியாது. மக்கள் அனைவர்க்குமாக, மாந்த இனம் முழுமைக்குமாக அவர் போரிட்டார். ஓர் இனத்தைத் தாழ்த்தி வீழ்த்துகின்ற முயற்சியில் ஈடுபடும் எந்த ஒரு மாற்றினத்தின் மேலும் அவர் அடித்த அடி விழுந்தது; இனி, எப்பொழுதும் விழுந்துகொண்டுதான் இருக்கும்.

அழித்துக் கொள்ளப்படாத தந்நலம் மேவிய ஓர் இனத்தின் மூடக்கொள்கைகளாலேயே மற்ற இன மக்களை உள்ளிருந்து அரித்து வருகின்ற ஓர் இன மக்களின்மேல் அவர் நடத்திய போராட்ட முயற்சிகள் முழுவதுமாக வெற்றி பெருமல் போயிருக்கலாம், ஆனால் அவர்போலும் காலத்தலைவர்களின் கருத்துகள், அவற்றின் வெற்றி தோல்விகள் - வெட்ட வெளிச்சமாக - வெளிப்படையாகக்

கணித்துவிடக் கூடியன அல்ல. வெட்டி வைத்த ஏரிகள் போலவும், கட்டிவைத்த மண்டபங்கள் போலவும், நட்டு வைத்த நினைவுத் தூண்கள் போலவும் மக்கள் கண்களுக்குப் பருப்பொருள்களாக உருத்தருபவை அல்ல அவரின் தொண்டு முயற்சிகள். மாந்த உணர்வோடு உணர்வாகக் கலந்து, அவர்களையே உருமாற்றும் திறன் வாய்ந்தவை அவை. கப்பலின் பாய்மரங்களைத் தாக்கி, அவற்றின் திசைகளைத் திருப்புகின்ற வலிந்த புயற்காற்றைப் போல் ஆழ வேரூன்றியுள்ள நச்சு மரங்களை அகழ்ந்தெடுத்து அப்புறம் வீசும் அடர்த்த சூருவளியைப் போல், மக்களிடையே நடத்தும் அவர்போலும் புரட்சிக்காரர்களின் போராட்டங்கள் எழுச்சிபெற்றுத் திகழும். அவற்றை அளவிட முடியாது. அவற்றின் வெற்றி, தோல்விகளை எடையிட முடியாது. காலத்தால் ஏற்படும் படிப்படியான மாறுதல்களும் அம்மாறுதல்களால் உருவாகும் மக்களின் மறுமலர்ச்சிகளுமே அவற்றின் வெற்றிகள். அவற்றை ஒரு தனி மாந்தனை வைத்துக் கணிக்க முடியாது. ஒட்டு மொத்தமான ஓரின மக்கள் கூட்டத்தை வைத்தோ, அதன் முன்பின் வரலாறுகளை வைத்தோதான் அவற்றை எடையிட முடியும்.

புரட்சி என்பது ஒரு கதையைப் போன்றதன்று. அஃது ஒரு வரலாற்றைப் போன்றது. அதற்குத் தொடக்கம் ஏது? முடிவுதான் ஏது? உலக வரலாற்றுப் பொத்தகத்தின் ஒரு சில கால ஏடுகளாகத் திகழும் பெரியார் போலும் வரலாற்றுக்காரர்களை, அப்பக்கங்களின் எழுத்துகளாகவும் புள்ளிகளாகவும் உள்ள மற்ற தனி மாந்தர்கள் எடைபோட்டுவிட முடியாது. தொடர்ந்து எழுதப்பெறும் உலகத்தின் கதையில் பெரியாரைப் போன்றவர்கள் உறுப்பினர்கள். மற்ற பொது மாந்தர்களோ அக்கதைக் காட்சி

களுக்கு இடையில், தோன்ருமல் வந்துபோகும் சிறுசிறு பறவைகள், பட்டுப்பூச்சிகள், வெட்டுக்கிளிகள், ஈக்கள், எறும்புகளைப் போன்றவர்கள். காட்சி மாற்றங்களையும், உறுப்பினர்களின் அறிவு மோதல்களையும் அச்சிற்றுயிரி னங்களால் அறிந்து எடையிட முடியாது.

சாக்ரடீசு, புத்தர், திருவள்ளுவர், ஏசு, நபி, காந்தி, போலும் காலத்தின் எல்லையாக அமர்ந்து விட்டவர் பெரியார். ஆனால் அவர்கள் செய்த அருஞ்செயல்களைவிட ஒருபடி மேலாகவே செய்தார் பெரியார். அவர்கள் அனை வரும் நன்மைகளையே செய்தார்கள்; பரப்பினுர்கள்; பேசி னுர்கள்! ஆனல் பெரியார் தீமைகளையே எதிர்த்துப் போரிட்டார். விதைகளைத் தூவுகிறவர்களைவிட, மண்டிக் கிடக்கும் களைகளை அகற்றுபவனுக்கும், முட்களை வெட்டி யெறிபவனுக்கும், கற்களைப் பொறுக்கி அப்புறப்படுத்து பவனுக்குந்தான் வேலைகள் மிகுதி. முயற்சிகள் மிகுதி உடலுழைப்பு ஏராளம்.

கிரேக்க அறிஞன் சாக்ரடீசு பேசிய பேச்சுகளைவிட பெரியார் பேச்சுகள் அளவிலும், உணர்விலும் பலமடங்கு மிகுந்திருக்கும். சாக்ரடீசு தான் ஆழமாகச் சிந்தித்துக் கொஞ்சம் பேசிப், பிறரை தன்னினும் அதிக மாகப் பேசவைத்தான். பெரியார், தாம் அகலமாகச் சிந்தித்து அதிகம் பேசிப் பிறரைக் கொஞ்சமேனும் சிந்திக்க வைத்தார். சாக்ரடீசு பேசியதைவிட, நடந்ததை விட பெரியார் அதிகமாகப் பேசினுர்; மக்களுக்காக இரவு பகல், பனிகுளிர், வெயில் மழை, மேடுபள்ளம், காடுநாடு, சிற்றூர் பேரூர் - என்று பாராமல் நேரிடையாக நடந்து மக்களைப்போய்க் கண்டார்; அவர்களுக்காகக் கவலை கொண்டார் அவர்களுக்காக மணிக்கணக்காகப் பேசினுர்;

அவர்களின் நரம்புகளிலும் குருதியோட்டங்களிலும் தன் மான உணர்வையும் தன்னம்பிக்கையும் ஊட்டி உணர் வேற்றினர். எனவே சாக்ரடீசைவிடப் பெரியார் பல படிகள் உயர்ந்தவர்.

புத்தர் அரசர். அவர் நினைந்திருந்தால் அவரால் முடிந்த அளவு அவர் நாட்டிலிருந்த மக்களையாகிலும் இன்பமாக வாழும்படி அறிவுரைகள் சொல்லியிருக்கலாம்; ஆக்கங்களைப் பகிர்ந்திருக்கலாம். 'ஆசைகளை விட்டுவிடு' என்பது அவ்வளவு சிறந்த அறிவுரையாகாது; அதுவன்று துன்ப நீக்கத்திற்கு மருந்து. 'ஆசையை அறு; துன்பம் நீங்கிப்போகும்' என்று எவரும் சொல்லலாம். இதனால் யாருக்கும் துன்பம் நீங்கிவிடாது. இவ்வுலகில் பிறந்து விட்டோம். ஆசைக்காகவே பிறந்தோம் என்றே வைத் துக் கொண்டாலும் 'அதை எப்படி நிறைவேற்றிக் கொள்வது' என்பதிலேயே உயிர்களெல்லாம், மக்களெல் லாம் போராடுகின்றார்கள். தனிப்பட்ட ஆசை என்பது இருக்கட்டும். அவரவர் வாழ்க்கைக்குரிய பொதுவான இயற்கையான, நேர்மையான ஆசை என்பதை எவரும் நிறைவேற்றிக் கொள்ளவே செய்வர். அத்தகைய எல்லா ருக்கும் உகந்த - வாழ்வுக்குரிய இயல்பான ஆசையை எப்படி நிறைவேற்றிக் கொள்வது - அதற்குள்ள தடைகளை எப்படித் தகர்த்தெறிவது என்று வழிகாட்டுவது மிகக் கடினம், மற்றபடி "ஆசையை அடக்கு" என்பது சிக்க லுக்குத் தீர்வு ஆகாது; சிக்கலே இல்லாமல் செய்வது அது. ஆனல் உலகில் சிக்கல்கள் இருந்து கொண்டு தாமே இருக்கின்றன. பசிக்கு உணவு தேவையென்றால், பசியை அடக்கிக்கொள் என்பதன்று தீர்வு. ஒருவன் குமட்டும்படி வயிறு புடைக்கத் தின்கிறான்! மற்றவன் ஒரு வாய்ச் சோற்றுக்கு அங்காந்து கிடக்கிறான் என்றால்,

அவனைப் பார்த்துப் 'பசியை அடக்கிக்கொள்!' 'ஆசையை அடக்கிக்கொள்' என்பதன்று தீர்வு. அவனின் ஏமாற்றை யும், இவனின் ஏமாளித்தனத்தையும், வெளிப்படை யாக எடுத்துச் சொல்லி, இருக்கின்ற உணவைப் பகிர்வு செய்வதற்கான முயற்சியை உண்டாக்குவதே குமுகாயப் புரட்சியாளர்கள் செய்கின்ற வேலையாகும். அவர்களைப் போன்றவர்கள், புத்தரைப் போன்றவர்களைவிட, வினை மிகுந்தவர்கள்! சிறந்த பயனுள்ளவர்கள்; மக்களுக்கு நலஞ்செய்பவர்கள்; செயற்கரிய செய்பவர்கள்!

இனி, திருவள்ளுவரைப் போலும் மெய்யறிஞர்கள் மிகப்பெரும் பேரறிவாளர்களாக இருந்து நூல்கள் படைக்கலாம். ஆனால் மக்கள் நிலையில் அவற்றைக் கொண்டு செலுத்தும் வல்லமையுள்ளவர்களாலேயே அத் தகைய அறிவு உலகுக்குப் பயன்பட முடியும். அதற்குப் பெரியாரைப் போலும் புரட்சியாளர்களே தேவை. இனி, அறிவைச் செயலுக்குக் கொண்டுவரும் முயற்சியில், ஏசு வின் முயற்சி புத்தரைவிட, திருவள்ளுவரைவிட ஒருபடி மேலானது. தமக்கென்று ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டு, அதற்கெனத் தொண்டர் குழாத்தை அமைத்துக் கொண்டு, சில இடங்களில் நேரிடையான முயற்சிகளில் ஈடுபட்டவர் அவர். மக்களைவிட்டு விலகி மக்கள் தொண்டு செய்யமுடியாது என்னும் கொள்கை ஏசுவினாலேயே முதன் முதல் கடைபிடிக்கப் பெற்றது. ஏசு ஒரு தேவ இறக்கம் (அவதாரம்) என்பதைவிட நல்ல மக்கள் தொண்டர் என் பதையே அறிவுலகம் ஏற்றுக்கொள்ளும். இனி, முகமது நபியோ மக்களின் பொருட்டுப் பெரிய போராட்டங்களை யும் போர்களையுமே நிகழ்த்தியவர் ஆவார். ஏசுக்கிறித்து வைவிட இவர் மக்களின் பொருட்டு மிகுதியாகப் போராட் டம் நிகழ்த்தி வெற்றி பெற்றார். இனி, காந்தியடிகளின்

தொண்டில் பெரும் பகுதியும் மக்கள் நலக் குறிக்கோள் இருந்தாலும், தனி மேலாளுமை செய்யும் ஓர் இனத்தின் தன்னலவுணர்வும் அதன் மூடக் கொள்கைகளுக்குத் துணை போகும் வருணாச்சிரமக் கீழ்மைத் தாக்குதல்களும் அவர் முயற்சிகளில் வேரோடிக் கிடந்தன. இவை அவர் தொண்டின் தூய்மையைக் கெடுத்தன. எனவே, இனநல விரும்பிகளும், வருணாச்சிரமம் விரும்பிய முதலாளிகளும், செல்வர்களும் இறுதியில் தன்னாட்டுரிமை பெற்ற அரசும், அவர்க்கும், அவர் முயற்சிகளுக்கும் பெரிதும் துணையாக வந்து அமைந்தார்கள். தொடக்கத்தில் துன்பமாக இருந்த அவர் குடிமை முயற்சிகள் இறுதியில் அவர் கொள்கைகளுக்குப் படிகளாய் அமைந்தன. மேலும் இவ்வுலகில் மத முயற்சிகளுக்கும், வழிவழியாக வரும் மூடக் கொள்கைகளைக் கட்டிக்காக்கும், அறியாமை முயற்சிகளுக்கும் ஒருபுறம் இல்லையானாலும் மறுபுறத்தில் வரவேற்புகள் இருந்தே தீரும். ஆனால் பெரியார் போன்றவர்களின் சீரிய, துணிந்த முயற்சிகளுக்கு எல்லாப் புறங்களிலும் எதிர்ப்புகளே சூழும் என்பது கவனிக்கத்தக்கது.

பெரியாருக்கு எப்படி வரலாறு உண்டோ, அப்படியே அவர் காலத்துக்கும் ஒரு வரலாறு உண்டு. அவ்வாறு காலத்தின் வரலாருக, வரலாற்றின் காலமாக அமைந்து போன அவரின் கொள்கைகள் என்பவை, அவர் பருவுடல் வாழ்க்கையோடு முற்றுப்பெற்றவை ஆகா. அவருடைய உடல்தான் அக்கொள்கைகளின் வித்து. அவ்வித்து அழிந்து மரமாகிவிட்ட நிலையே அவர் பருவுடல் மறைந்து போன நிலை. இனி அம்மரம் நன்றாக வளர்ந்து, செழித்து, முற்றி முதிர்ந்து பூத்துக் காய்த்துக் கனிந்து மேலும் ஆயிரக்கணக்கான வித்துகளைத் தோற்றுவிப்பதே இயற்கை. அவ்வாறு தோற்றுவிக்கப் பெறும் வித்துகள்

யாவும், மேலும், மேலும் பல்லாயிரக்கணக்கான கோடிக் கணக்கான வித்துகளை இவ்வுலக மெங்கணும் பரப்பிக் கொண்டேயிருக்கும். அவற்றின் விளைவுகளெல்லாம் அந்த மூல வித்தின் விளைவுகளாகவே கருதப்பெறும்; பெரியார் என்னும் மூலவித்தின் விளைவை, அதனின்று தோன்றிய கோடிக்கணக்கான வித்துகளின் பரப்பை யாரும் ஓரிடத்தி லிருந்து கொண்டு, ஒரு காலத்திலிருந்து கொண்டு எடை யிட்டுவிட முடியாது.

அவர் கொள்கைகளில் பிழைகள் இருக்கலாம். கருத் துகளில் தவறுகள் இருக்கலாம். (எவருடைய கருத்துக ளிலும் கொள்கைகளிலும் எவரும் பிழைகள் காணத்தான் செய்குவர். அவைபற்றி நாம் இங்கு எதுவும் கூறவிரும்ப வில்லை) ஆனல் முயற்சிகளில் அவர் தூய்மையானவர். மக்களுக்குழைத்த உழைப்புகளில் மாசில்லாதவர்; பொதுத் தொண்டுக்கே இலக்கணமானவர்; வரலாற்றில் அவரைப்போல் மக்களுக்காக உழைத்தவர்கள் மிகக்குறை வானவர்கள்.

தம் வாழ்வுக்கென எதையும் தம் அறிவால் சிந்தித்துக் கொள்ளாத அவர், தம் மகிழ்ச்சிக்கென எதையும் தம் கண்களால் பார்த்துக் கொள்ளாத அவர், தம் தேவைக் கென எதையும் தம் காதுகளால் கேட்டுக்கொள்ளாத அவர், தம் உயிர்ப்புக்கென ஒரு நொடியும் மூச்சுக்காற்றை உள்வாங்காத அவர், தம் இன்பத்துக்கென ஓரிடத்திலும் தம் உடலைக் கிடத்தாத அவர். தமக்கென ஒரு சொல்லும் பேசியிராத அவர், ஒரு முனிவர் போல் வாழ்ந்தார். துறவிபோல் அலைந்தார். ஆனல் ஒரு தொழும்பனைப் போல் இவ்வுலக மக்களுக்குத் தொண்டு செய்தார்.

துறவியும், முனிவனும் தமக்காகவே தம்தம் உயிர்கள் உய்யவேண்டும் என்பதற்காகவே, இல்லறத்தைத் தவிர்த்துத் துறவறம் மேற்கொள்ளுகிருர்கள். அவ்வாறு அவர்கள் தங்கள் உயிர்களை மட்டுமே ஈடேற்றுகிருர்கள்; கரைசேர்த்துக் கொள்கிருர்கள். பிற உயிர்களின் மலர்ச்சி பற்றியோ, முன்னேற்றம் பற்றியோ அவர்களுக்குக் கவலை யிருக்க முடியாது. அவ்வாறு கவலையிருக்குமானுல், தம் இன மக்களை - தம்மோடு-ஒரு காலத்தாலும் இடத்தானும் வாழும் தம்மைச் சூழ்ந்த உயிர்க்கூட்டத்தை - அவர்கள் எக்கேடு கெட்டால் என்ன என்னும் கருத்தோடு - விட்டு விட்டு அவர்கள் மட்டும் புறம்போய்த் துறவுபூண்டுவிட மாட்டார்கள்.

ஆனுல், பெரியாரைப் போலும் மக்கள் நலம் விரும்பு பவர்கள், துறவிகளைப்போல், புறத்தானும், அகத்தானும் எவ்வகைப் பற்ருே பாசமோ இன்றி வாழ்ந்தாலும் மக்க ளுக்கிடையிலேயே வாழ்கிருர்கள்; மக்களுக்காகவே வாழ் கிருர்கள்; மக்கள் நலன்களே தங்கள் நலமென்று வாழ்கி ருர்கள்; ஏன் மக்களாகவே வாழ்கிருர்கள். அவர்கள் தாம் வித்துக்கள்! வித்துப்போன்றவர்கள். அந்த வித்துகள், அவற்றின் காலத்தவர்களுக்காகவும் வாழ்ந்தவர்கள்; வாழ்கின்றவர்கள்.

அறிவின் முனைப்பால், அதன் வலிமையால், தம் உயிரை ஒளியேற்றிக் கொண்டு புலன்களை அவித்த முனி வர்களைப் போல், நலன்களைத் தவிர்த்த துறவிகளைப்போல் மக்கள் இனத்திற்காகவே தாம் வாழ்வெடுத்தது என்னும் நெகிழாத உறுதியுடன், கொள்கையுடன் அவர்கள் உய் யும் பொருட்டு உயிர் வாழ்ந்தவர் பெரியார். அவர் ஒரு

குமுகாய வித்து; நல்வித்து! அவ்வித்து ஒரு காலத்திற்கோ, ஓரிடத்திற்கோ, ஓரின மக்களுக்கோ உரியதன்று. இனி வருகின்ற மக்கள் வழியினர்க்கெல்லாம் உரியது!

**உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்**
**வரனென்னும் வைப்பிற்கோர் வித்து — குறள் 24**

**செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார் — குறள் 26**

# உயர்வடைதல் என்றோ?

*எதையெதையோ பேசுகின்றார்; செய்கின்றார்! நாட்டின்*
*இருண்டநிலை மறையவில்லை; தாழ்வகல வில்லை!*
*புதைகுழிகள்; ஏமாற்றுப் புனைவுகள்;பூ சலகள்!*
*பூத்துவரும் முன்னேற்றம் தின்கின்ற நாய்கள்:*
*கதையெழுதி இழிவெழுதிக் கயமைவிளைக் கின்ற*
*கழிசடைகள் மலக்குழிகள்! பணந்தினனும் பேய்கள்*
*பதைபதைக்கும் நெஞ்சோடு நாட்டைநினைக் கின்றேன்*
*பைந்தமிழர் வாழ்வுநிலை உயர்வடைதல் என்றோ?*

*நாகரிகம் எனும்பெயரால் நசித்துவரும் உள்ளம்!*
*நரிக்கூட்டம் ஆடுகின்ற அரசியல் கூத்தாட்டம்!*
*வேகின்ற வறுமையிலே சாகின்ற உயிர்கள்!*
*வெறித்தனங்கள்! அதிகாரம், பதவிக்கொண் டாட்டம்!*
*வாகுபோ கற்றநிலை! வழவழப்புப் பேச்சு!*
*வழிவழியாய் அரித்துவரும் குலசமயக் கூச்சல்!*
*நோகின்ற நெஞ்சோடு நாட்டைநினைக் கின்றேன்*
*நொந்துவரும் எந்தமிழர் உயர்வடைதல் என்றோ?*

# தமிழா, எழுச்சிகொள்!

*1968-இல் இந்திராவின் நடுவணரசு வகுத்த இந்திப் பரப்புத் திட்டத்தின் சூழ்ச்சியைத் தமிழர்களுக்குத் 'தென்மொழி' எச்சரித்து எழுதியது. இன்றும் அதனைத் தமிழர்கள் மறவாது நெஞ்சில் பதித்துக் கொள்க*

''தமிழக மண்ணில் 360 இந்திப் பள்ளிக்கூடங்கள் - நடுவணரசு சார்பில்'' - அண்மையில் வந்த நடுவணரசினர் அறிக்கை இது. இந்திரா அரசவைக்கு எத்தனையோ பணிகள்; கடமைகள்; சிக்கல்கள்! நாளுக்குநாள் மாநிலங்களில் சட்டமன்றக் கவிழ்ப்புகள்; முனைப்புகள்! குடியரசுத் தலைவர் தலையீடுகள்! கேரளாக்கள்! புதுச்சேரிகள்! பாக்கித்தானிய சீனச் சொரி சிறங்குகள்! இவை தவிர, பேராயக் கட்சிக்குள்ளேயே நாள்தோறும் நடைபெற்று வரும் சண்டை சள்ளைகள்; குத்துவெட்டுகள்! - இருந்தாலும் தில்லி அரசுக்கு எப்பொழுதும் அணையாத இந்திக் காதல்! இதனை அரசியல் மடமை என்பதா? உருசியாவைத்தான் கேட்கவேண்டும்.

வடவர் எப்பொழுதும் தங்களை மெத்த திறமைசாலிகளாகவே கருதியிருப்பவர்கள்; பற்றும் பற்றுமைக்குப் பார்ப்பனக் குடைச்சல்கள் வேறு; இந்தி வெறியரின் குத்தல்கள் வேறு. எனவே தில்லி அரசின் குரங்காட்டத்திற்கு அளவும் இல்லை; பொழுதும் இல்லை; வெட்கமும் இல்லை. இல்லையென்றால் எப்பொழுதும் இந்திப் பாட்டையே பாடி, அதற்குவரும் எதிர்ப்பாட்டைக் கேட்டுக்கொண்டிருக்குமா? அல்லது தெற்கிலிருந்து வரும் எதிர்ப்பு எத்தனை நாளைக்குத்தான் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் என்று கருதியிருக்கின்றார்களோ, என்னவோ? அவர்தம் முனைப்புகள் நமக்கு இரட்டை ஐயங்களைக் கிளப்பி இருக்கின்றன. ஒரு வேளை வடவர் உண்மையிலேயே அரசியல் திறமையுள்ள

வர்கள் தாமா என்பதொன்று. நாம் உண்மையிலேயே கோழைகள் தாமா என்பது மற்ருென்று. இல்லையென்ருல் சூடுகண்ட பூனை திரும்பவும் பாலுக்கு வருவானேன்?

பொதுமக்களிடமிருந்து ஒருமுக எதிர்ப்பைக் காட்டி யாகி விட்டது; இங்குள்ள அறிஞர்கள் அறிக்கைமேல் அறிக்கை எழுதி விடுத்து விட்டனர்; இந்தியைப் படிக்கப் போகும் மாணவர்களும் இந்திய அரசுக்குப் பலவாருன ஏதங்களைக் காட்டிவிட்டனர், ஆனுல் இம்முத்தர எதிர்ப்பும் எத்தனை நாட்களுக்கு மூச்சுமுட்ட வந்துகொண்டிருக்கும்? பொதுமக்கள் மனம் சலித்து விட்டனர்; அறிஞர்கள் கை சலித்து விட்டனர்; மாணவர்களும் உடல் அலுத்துப் போயினர். இனி எதிர்ப்புக்கு யார் உள்ளார்? என்ற எண்ணம் போலும் அவர்களுக்கு! நல்லவேளை, இந்நிலையில் தான் தமிழக அரசு முளைத்தது; முனைந்து கொண்டுள்ளது; இனி அதுதான் தன் எதிர்ப்பு அனலைக் கக்கியாக வேண்டும். தில்லியரசின் ஊழியர்கள் அடக்குமுறைச் சட்டத்தை கேரளா வடவரின்முகத்தின்மேல் விட்டெறிய வில்லையா? ஆந்திர அரசு மது விலக்குக் கொள்கையைச் சாய்க்கடையில் போட்டு விடவில்லையா? தமிழக அரசு மட்டும் என்ன? வடவரின் குரங்காட்டத்திற்கு தாளமா போடும்? இந்திக் கொள்கை ஒன்றை வைத்தே நாட்டை வெட்டிக்கொள்ள முயற்சி செய்யவேண்டியது தான்!

தமிழ்நிலத்தில் இந்திக் கலை ஊன்றவே கூடாது. இத்தனை ஆண்டுகளாக தமிழர் வடவர்க்கு வல்லடிமையாய் இருந்தது போதும். அக்கொள்கை பக்தவத்சலத்தோடு குழிதோண்டிப் புதைக்கப் பெற்றது. இனி எந்தச் சட்டத்திற்கோ, ஆணைக்கோ தமிழக அரசு அஞ்சக்கூடாது. தன் வலிந்த எதிர்ப்பைக் காட்டியே ஆகல் வேண்டும். முடிந்

தால், சுருட்டிவைத்து மூலையில் போட்ட நாட்டுப் பிரிவினையை மீண்டும் வடவர்முன் விரித்துப் படித்துக் காட்டவே வேண்டும். தயங்கக்கூடாது. மயக்கமும் கூடாது. தமிழ்ப்பட்டாளம் ஒன்றும் இந்திப் பட்டாளத்திற்கு இளைத்தது இல்லை என்பதை உணர்த்தியே ஆகல் வேண்டும். அத்தகைய காலமும் வந்தது. செத்துப் பிறந்தவர்கள் நாம். பட்டு உணர்ந்தவர்கள் தமிழர்கள்; கெட்டது போதும் தமிழா! இனியாவது உன் கிளர்ச்சியைக் காட்டு! வளர்ச்சியை நிலை நிறுத்து.

இந்திப் பள்ளிக்கூடங்களுக்கு இங்குள்ள ஓட்டைக் குடிசைகளிலும் இடம் வைக்கக்கூடாது. தெருத்திண்ணைகளிலும் காலடிவைக்க விடக்கூடாது. குடுமிகளும், பூணூல்களும் தம் தம் வீட்டு அடுப்பங்கரைகளிலாவது இந்திக்கு இடம் வாங்கித்தந்துவிடத் துடிக்கும் அதற்கு இடம் வையாதே! அடிமைக் கல்வி நமக்குத் தேவை இல்லை என்பதை அடிப்படையிலிருந்து விளக்கிக்காட்டு. தமிழக அரசு தன்னால் செய்வதைச் செய்யட்டும். நாமும் நம்மால் ஆனதைச் செய்துதான் ஆகவேண்டும்.

அரசை மீறி, நம்மை மீறி இங்கு இந்திப் பள்ளிக் கூடங்கள் திறக்கப்பட்டால், இந்தி நூல்கள் தீக்கிரையாக வேண்டும். இந்திப் பள்ளிகள் இடித்துத் தள்ளப்பட வேண்டும். இந்தியாசிரியர்கள் தம் வாய்களுக்குத் திண்டுக் கல் பூட்டைப்பூட்டித் திறவுகோலை இந்திரா அமைச்சரவைக்கு அஞ்சலில் விடுக்கவேண்டும். எச்சரிக்கையாய் இருதமிழா! தூங்கிவிடாதே! தூங்கித்தூங்கி வல்லடிமைச் சேற்றில் உழன்று உயிர் காய்ந்தது போதும்! உயிர்த்து எழு! வீறுகொண்டு நில்! அரிமா என உலா வா! இனி உலகில் உள்ள எவனுக்கும் நீ அடிமையாகக் கூடாது.

தேசீயங்களைப் பற்றிக் கவலைகொள்ளாதே! பருக்கைச் சோற்றுக்குப் பறந்து திரியும் அந்த அண்டங்காக்கைகளுக்கு அஞ்சிவிடாதே, நீ! நீ கோழையில்லை என்பதை உலகுக்கு உணர்த்து! நீ எவர்க்கும் அடிமை இல்லை என்பதைக் குன்றின்மேல் நின்று கூவு! வாழ்வு புதியது! சாவு பழையது! அடிமையின் இனிப்பு நாக்கோடு சரி! உரிமை உயிரிலும் இனிக்கும்! உடலெல்லாம் இனிக்கும் தில்லியின் வலிந்த பிடிக்குள்ளிருந்து நீ விடுபட்டு வா! அதன் சூழ்ச்சித் தழுவலிலிருந்து உன்னை விடுவித்துக். கொள். முப்பது நூற்றாண்டுகளாக நீ அடிமை! உன் உடலின் அணுக்கள் கூட மாறியிருக்கும். ஆனால் இன்று நீ விழித்துள்ளாய்! மீண்டும் விழிமூடித் தூங்காதே! விழித்தெழு! உரிமைகேள்! தரப்படவில்லையானால் அதன் வலிந்த பிடியை உதறித்தள்ளு! பார்ப்பான் பசப்புக்கும், வடவன் நயப்புக்கும் நீ செவி தராதே! அரசியல் மூடுமந்திரத்திற்கு நீ ஆட்படாதே! உரிமை வானில் பறந்து திரி! உன் மூச்சுக்காற்றில் தில்லியின் சப்பாத்தி மணம் வீசக்கூடாது. தமிழகத்தின் சோற்று மணம் வீசுதல் வேண்டும். மேலாடைக்கு அலைந்து திரியாதே! உன் இடைச்சீலை பறிபோகாமல் பார்த்துக்கொள்! ஒற்றுமையும் ஒருமைப்பாடும் பேசி உன்னை வெற்றுளாக்க வளைந்து திரியும் கழுகுகளுக்கு நீ இரையாகாதே!

# ‘இந்தி’யா, ‘இந்தியா’வா?

## (1969–இல் மீண்டும் எச்சரிக்கை)

‘குறடும் பேதையும் கொண்டது விடா’ - என்பது பழமொழி. வடவர்க்கும் நடுவணரசுக்கும் இந்திபற்றி எத்துணேயோ எடுத்துக் கூறியாயிற்று. இன்னமும் அவர் தம் குறட்டுப்பிடி தளரவில்லை. அரசியலில் விடாப்பிடி ஓரளவு தேவைதான். ஆனல் கருத்தைப் பொறுத்தே அப்பிடி கையாளப் பெறுதல் வேண்டும். இல்லையெனில் அப்பிடியே அவர்களுக்குச் சாப்பிடியாக அமைந்து விடுவதுண்டு. ஐம்பது கோடி மக்கட் பெருக்கமுள்ள ஒரு நாடு இந்தியா. என்ருலும் இவ்வைம்பது கோடி மக்களும் ஒரே கொள்கையும், ஒரே வகை உடையும், நடையும், மொழியும், கருத்தும், பிரிவும் கொண்டவர்களாக இல்லை என்பதை நடுவணரசு உணராமலில்லை. ஆனல் எப்படியாவது இவர்கள் அத்தனைப் பேரையும் ஒரே மொத்த உருவமாக, ஒரே உணர்வுடையவராக ஒரே மொழி, நடைபோக்கு உடையவராகப் பண்ணிப் பார்த்துவிட வேண்டுமென அவர்களுக்குக் கொள்ளை ஆவல். அதற்கொரு ‘நொள்ளை’ வழியையேனும் பின்பற்றிவிட வேண்டுமென்பதே அவர்கள் வேட்கை. அதற்கு அவர்கள் மந்திரக் கோலாகப் பயன்படுத்த விரும்புவதே இவ்விந்தி மொழி. ‘இந்தி’ மொழி ஒன்றைக் கொண்டே இங்குள்ள எல்லாரையும் ‘இந்தியர்’ ஆக்கிவிட வேண்டுமென்று இந்திரா முதல் கோவிந்த தாசு வரை எல்லோரும் முக்கி முணகிக் கொண்டு முயற்சி செய்கின்றனர். இம்முயற்சி முடிவில் அவர்களின் உடலில் மடிந்து கிடக்கும் அரசியல் அழுக்குகளை வெயர்வையாக வெளியே கொண்டுவந்து தள்ளுவதோடு சரி. அதுவரை அவர்கள் முறுக்குக் செருக்குக் நிற்கப்போவதில்லை என்பதைத் தமிழர் திட்டவட்டமாகப் புரிந்துகொண்டு விட்டனர்.

இவர்களின் இந்தி 'உடற்' பயிற்சிக்கிடையில் தமிழன் ஓர் உண்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். தமிழன் தன் நாட்டைத் தனியே பிரித்துக் கொண்டாலன்றி, தவளையின் கால்களோடு கட்டுப்பட்ட எலியைப் போல் இழுப்பும் பறிப்புமாகவே தொல்லையும் துயரமும் பட்டுக்கொண்டுதான் இருத்தல் வேண்டும். இதனைத் தமிழனும் இங்குள்ள தமிழ்த்தலைவர்களும் இந்திரா அமைச்சரவைக்கு துணிந்து அறிவித்தாலன்றி 'இந்தி' பூச்சாண்டி காட்டிக்கொண்டுதான் இருக்கும். இந்தத் துணிவான அறிவிப்பையும் அதனையடுத்து அது நிறைவேற்றப்படவேண்டிய வழிகளையும் கூறுவதை விட்டு விட்டுத் தமிழன் என்றைக்கும் வடவனோடு அமைதியாகவே வாழ்ந்துவிட முடியாது. தென்னாட்டுத் தமிழனுக்கு எப்பொழுதும் ஓருண்மை வானத்துக் கதிரவன்போல் ஒளி விட்டுக்கொண்டே இருத்தல் வேண்டும். அஃதாவது தமிழனுக்கு எப்பொழுதும் பகை இரண்டு; ஆரியனும் வடவனும். இவ்விரண்டு பகைவர்களும் தமிழனை மூவாயிரமாண்டுகளாக முன்னேற விடாமல் தடுத்துக் கொண்டுள்ளனர் என்பதை அவன் என்றும் மறந்துபோகக் கூடாது; மறந்து போவானாயின் இவன்தன் தனிச்சிறப்பை விட்டுவிட வேண்டியதுதான்; ஒன்றால் இவன் ஆரியனாக மாறிவிடலாம்; அன்றால் இவன் வடவனாக வடிவெடுத்துக் கொள்ளலாம். இல்லை 'கூழுக்கும் வேட்கை, மீசைக்கும் ஆவல்' என்பதுபோல் தமிழனாகவுமிருக்க முடியாது; ஆரிய, வடவர்களுடனும் ஒன்றிப்போகவும் முடியாது. இது வரலாறு கண்ட உண்மை. அமெரிக்கனும் சீனனும் ஒத்துப்போனாலும், வடவியட்னாமியனும் தென் வியட்னாமியனும் ஒத்துப்போனாலும் வடவாரியனும் தென் தமிழனும் ஒத்துப்போக வாய்ப்பில்லை. ஒருவேளை தமிழன் தன்

தாளாண்மைத் தனத்தாலும், வேளாண்மை மடத்தாலும் ஒருவாறு தன்னை இழக்க ஒப்புக்கொண்டாலும் வடவாரியன் தன்னை இழக்க ஒருப்படமாட்டான். இஃது உறுதி; உறுதி.

எனவே, தமிழனுக்கு அரசியல், குமுகாயவியல், பொருளியல், வாழ்வியல், மொழியியல் - முதலிய அத்தனைத் துறைகளிலும் தன்னறிவும் தன்னுரிமையும் வேண்டுமானால் மாற்றமுடிந்த முடிபாக இவன் வடவனிடமிருந்தும், ஆரியப் பார்ப்பனரிடமிருந்தும் விடுதலை பெற்றே ஆகல் வேண்டும். அறம், அருள், நடுவுநிலைமை என்பதையெல்லாம் புரிந்துகொள்ளவியலாத காட்டு விலங்காண்டிகளிடம் பேசிப்பயனில்லை. அவ்வாறு பேசிப்பேசியே தமிழன் இதுவரை தன் வலிவையும் இழந்தான்; பொலிவையும் இழந்துவிட்டான். இருக்கின்ற தமிழரும், தமிழும், தமிழ்ப்பண்பாடும் இனியாகிலும் காக்கப்பட வேண்டுமானால் தமிழன் பெறவேண்டியது இந்திய அரசியலினின்று தன்னைத் துண்டித்துக் கொள்வதே! ஒன்றி வாழவியலாத பொழுது பிரிந்து வாழ்வதே அறம்!

**ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே**
**கெட்டான் எனப்படுதல் நன்று.**

**மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை**
**பீடழிய வந்த விடத்து.**

# பழையன கழிதலும்
# புதியன புகுதலும்.

அண்மையில் கோவையினின்று அறிவியலறிஞர் உயர்திரு. கோ. துரைசாமி (நாயுடு) அவர்களிடமிருந்து தென்மொழிக்கு ஒரு மடல் வந்தது. அதில் அவர் 'தமிழ் மொழியில் ஏற்கனவே கலந்துள்ள பிறமொழிச் சொற்களை அப்படியே விட்டுவிட்டு இனிமேல் கலவாமல் பார்த்துக் கொள்வது நல்லதில்லையா? "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல, காலவகையினானே" என்றபடி இன்று வரை கலந்திருப்பதை அப்படியே விட்டுவிட்டால் என்ன? என்று கேட்டும், இதுபற்றித் தென்மொழியின் விளக்கத்தைத் தெரிந்துகொள்ள விரும்புவதாகவும், எழுதியிருந்தார். தெரிந்தே கேட்கின்ற இவரைப்போல், தெரியாமல் கேட்கின்ற அன்பர்கள் பலரும் ஆங்காங்கே இருப்பாராகையால், அவர்களனைவரும் அறிந்துகொள்ளுதற் பொருட்டு, அவர்க்கு விடுக்கவேண்டிய விடையை வெளிப்படையாகவே இங்கு எழுதிவிட முன்வந்தேன்.

அறிஞர் கோ. து. நா. அவர்கள் நம் அன்பிற்கும் மதிப்பிற்குமுரியவர். தென்மொழியின்பால் தனி அக்கறை கொண்டவர். பல நிலைகளில் அதற்கு நன்கொடை நல்கித் துணை நின்றவர். அவர்களின் புதியது புனையும் அறிவாற்றலை உலகமே அறியும். பழமை சான்ற அறிவியல் கருவிகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய்க் கால வெள்ளத்தினூடே நழுவிப்போவதையும் அவற்றிற்கும் மேம்பட்ட நிலையில் புதிய புதிய கருவிகள் எதிர்நோக்கி வந்துகொண்டிருப்பதையும் நேர்முகமாகக் காணுகின்ற வாய்ப்புடைய அறிவியல் அறிஞரான அவர்க்கு, மொழித் துறையிலும் இப்படிப்பட்டதொரு மாற்றம் நிகழ்ந்தால்

என்ன? எதிரேறி வருகின்ற மொழியியல் மாற்றங்களை ஏன் நாம் தடுத்து நிறுத்திவிட்டுப் பழமையையே பாராட்டிக்கொண்டிருக்க வேண்டும்? என்பன போன்ற கேள்விகள் எழத்தான் செய்யும். அப்படிக் கருதுவது அவர்க்கு இயல்பே. ஆனல் அவர் கூற்றுப்படி அறிவியல் துறை போலும் கருதப்பெறுவதா மொழியியல் துறையும்? என்பதைப் பற்றி நாம் தான் சிறிது எண்ணிப் பார்த்தல் வேண்டும். அறிவியல் மாற்றம் அல்லது வளர்ச்சி என்பது வேறு. அறிவியல் துறையில் பழையன கழிதலும் புதியன புகுதலும் நாள்தோறும் - ஏன் - நொடிதோறும் நடந்து கொண்டே இருக்கின்றன - இருக்கத்தான் செய்யும். அவ்வாறு நிகழவில்லையானல் அறிவியல் நிலை குன்றிவிடும். ஆனல் மொழியியல் துறையில் அவ்வாறு நிகழும்படி விட்டால் மொழி நிலை குலைந்துவிடும்; இன்றைய மொழி நாளைக்கு விளங்காமல் போய்விடும். இவ்விடத்திய மொழி பிறிதோரிடத்தில் உள்ளவனுக்கும் புரியாமற் போய் விடும். இப்பெரிய வேறுபாட்டுக்குக் கரணியம், அறிவியல் மாற்றங்கள் எங்கு நிகழ்த்தப் பெற்ருலும் ஓர் அடிப்படையை ஒட்டித்தான் நடைபெறல் வேண்டும். உறைதல் நிலைக்கு ஒரு பொருளைக் குளிர்வித்தாலொழிய அப்பொருளைக் கடினப் பொருளாக மாற்றுதல் எவர்க்கும் இயலாது. அல்லது உருகுதல் நிலைக்கு அப்பொருளைச் சூடேற்றினல் ஒழிய அப்பொருளை நீர்மமாக எவராலும் மாற்றிவிட முடியாது. இவ்வடிப்படை நிலைகளே இயற்கைச் சட்டங்களாக இருந்து அறிவியல் மாற்றத்திற்கு - அல்லது வளர்ச்சிக்குத் துணை நிற்கின்றன. இச்சட்டங்களை எவரும் தம் விருப்பம் போல் மாற்றிக்கொள்ள முடியாது. எந்த மொழிக்காரன் ஆனலும் - அல்லது எந்த நாட்டவன் ஆனலும் இச்சட்டங்கள் வழியே அவன்

நடந்தாகல் வேண்டும். ஆனால் மொழித்துறையில் வகுக்கப்படும் சட்டங்கள் இயற்கைச் சட்டங்கள் அல்ல. செயற்கைச் சட்டங்கள்! ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு வகைச் சட்டதிட்டங்கள். அவ்வச் சட்டங்களும் அவ்வம் மொழியில் உள்ள பேரறிஞர்களால் அப்பொழுதைக்கப்பொழுது படைத்துக் கொள்ளப் பெறுவன. ஒருமொழி அறிஞர்களால் அவ்வாறு காலங்காலமாய்ச் சரியென்று ஏற்றுக்கொள்ளப் பெற்ற அம்மொழியியல் சட்டங்களை வேற்று மொழிக்காரர் ஒருவர் திடுமென உடைத்துவிட முடியாது. மாற்றம் தேவை; இன்றியமையாதது என்று கருதினால் அந்த மாற்றங்களை அம்மொழியில் உள்ள அறிஞர்கள் ஒப்பவேண்டும். அவ்வொப்புதலைக் காலமும் உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு அச்சட்டங்கள் உறுதிப்படுத்தவில்லையானால் அம்மொழியை அரைகுறையாகப் பேசத் தொடங்கிய ஒவ்வொருவனும் தன் அறியாமைக்குகந்தவாறும், சோம்பலுக்குத் தக்கவாறும் அம்மொழியில் உள்ள சட்டங்களை நீக்கிவிட்டுப் புதிய புதிய சட்டங்களைக் கொண்டுவந்த வண்ணமாகவே இருப்பான். அக்கால் ஒரு காலத்தவன் மொழியை - அல்லது ஓரிடத்தவனின் ஒரே மொழியை இன்னொரு காலத்தவனோ-இன்னோர் இடத்தவனோ அறிய முடியாமற் போகுமேயானால் கருத்தையும் அறிய முடியாமற்போகும். இந்நிலை மொழியியல் துறையில் அறிவியல் துறைபோலும் இயற்கைச் சட்டமில்லையானாலும், செயற்கைச் சட்டத்தையேனும் நாமே இயற்கைச் சட்டம் போல் வலியுறுத்திக் கூறல் வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகின்றது இல்லையா?

இனி, மொழியியலில் உறுதிப்படுத்திக் கொள்ளும் நெறிமுறைகள் என்பன வேறு. அம்மொழியியற் கலப்பு

என்பது வேறு. பழையன கழிதலும் புதியன புகுதலும் என்னும் தொடரில் ஒரு மொழியில் - அம்மொழியிலக்கண நெறிமுறையில் புதியதாகச் செய்து கொள்ளப்பெறும் அல்லது கைவிடப்பெறும் சொல்லாக்கங்கள், சட்டதிட்டங் கள் முதலியவற்றைத்தான் குறிப்பிடப் பெறுகின்றனவே தவிர, அம்மொழிக்குத் தொடர்பில்லாதனவும் வேற்று மொழிக்குத் தொடர்புள்ளனவுமான நெறிமுறைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்றோ, வேற்று மொழிச் சொற்களைக் கலந்துகொள்ள வேண்டுமென்றோ கூறப் பெறவில்லை. நம் நாட்டுச் சட்டதிட்டங்கள் அல்லது நம் நாட்டு நாணயங்கள் பிறநாடுகளில் எடுபடாதது போல் நம் மொழிக்குள்ள வகுபாடுகள் பிறமொழிக்கு உரியன ஆகா. மொழியிலக்கணத்தில் மொழிக் கலப்புப் பாராட்டப் பெறுவதே இல்லை, தேவையானல் பிள்ளை யில்லாதவர்கள் அடுத்தவரின் பிள்ளைகளைத்தத்து எடுத் துக்கொள்வது போல் போதிய சொற்களில்லாத மொழியோ, அல்லது தேவையான சொற்களைப் படைத் துக்கொள்ள ஆற்றலற்ற மொழிகளோ பிறமொழிச் சொற் களைத் தம் மொழிக்கண் ஏற்றுக்கொள்வதில் பிழையில்லை. அதைத் தவிர அவற்றிற்கு வேறு வழியும் இல்லை. கால மெல்லாம் வறடியாய் - மலடியாய் இருப்பதைவிட அடுத் தவர் பிள்ளையையாகிலும் தாய்போல் பேணி வளர்ப்பது நல்லது. ஆனல் பிள்ளைபெற முடிந்தவளும், ஏற்கனவே பல பிள்ளைகளைப் பெற்றவளும் ஏன் பிற பிள்ளைகளைத் தத்து எடுத்துக் கொள்ளல் வேண்டும்?

மேலும், நம் தமிழ்மொழி பிறமொழிகள் சிலவற்றைப் போல் போதிய சொற்களில்லாத வறண்ட மொழியுமன்று; புதிய சொற்களைப் படைத்துக் கொள்ளவியலாத மலட்டு மொழியுமன்று. அன்றன்றும் உலகியல் முதிர்ச்சிக்கும்

அறிவியல் வளர்ச்சிக்கும் ஏற்ப புதிது புதிதாய்ச் சொற்களைப் படைத்துத்தரும் நிரம்பிய தாய்மைத் தன்மை வாய்ந்தது. மாந்தனுக்குள்ள மூளையாற்றல் எவ்வளவு ஆழமாகவும், அகற்சியாகவும் பாய்ந்து செல்ல வியலுமோ, அவ்வுள்வுக்கவ்வளவு தன்னையும் வளர்த்துக் கொள்ளும் திறனும் உரனும் சான்றது. இஃதேன் பிறமொழிச் சொற்களைக் கடன் கொண்டு தன் செப்பத்தையும், நுட்பத்தையும் ,இகழ்ந்து போகல் வேண்டும்?

மேலும் இதுவரை தமிழ்மொழியில் ஏற்பட்டுள்ள கலப்பு தானுகவே ஏற்பட்ட கலப்பும் அன்று. வேண்டுமென்றே ஓர் இனம் தன் இனத்தை உயர்த்திக் காட்ட வேண்டும் என்ற நோக்கோடு தன் மொழியை, தன் மதத்தை, தன் பண்பாட்டை நம்மில் கொணர்ந்து கலக்கச் செய்த வலுக்கட்டாயக் கலப்பு ஆகும். இல்லெனில் மொழி - பாஷையாகியிருக்காது; முதுகுன்றம் - விருத்தாஜலம் ஆகியிருக்காது. பொங்கல் - சங்கராந்திப் பண்டிகையாகியிருக்காது; பள்ளிக்கூடம் - வித்தியாலயமாகியிருக்காது; திருமணம் - விவாக சுபமுகூர்த்தமாயிருக்காது; நம் மூத்தமகன் ஜேஷ்ட குமாரனுகியிருக்கமாட்டான்; உலகத்திற்கே நாகரிகத்தைப் புகட்டிய நாமும் இன்று நாலாந்தர சூத்திர ஜாதியாயிருக்கமாட்டோம்.

இனி, இறுதியாக நாம் அறிவியலறிஞர்க்கு இன்னென்றையும் கூறிக்கொள்ள விரும்புகின்ரேம். நாம் தன்மானமற்றவர்களாக, அறியாதவர்களாக, ஏமாற்றப் பட்டவர்களாக இருந்தவரை நம் மொழியையும், நம் இனத்தையும், நம் பண்பாட்டையும் குழப்பிக் கொள்ள இசைந்து விட்டோம். அதன் பயனுய் உலகில் மிகவும் கீழான நிலையில், இன்னும் முன்னேருத நிலையில் நிலை குன்றிப்போனேம். ஆனல் இக்கால் நம் தவறுகளை

உணர்ந்து, தன்மானமுற்று, விழிப்படைந்து வருகையில் ஏன் நாம் இன்னும் மொழிக்கலப்பை விரும்புதல் வேண்டும். ஒருவன் நம்மை ஏமாற்றுவது; நாம் இன்னமும் ஏமாறிக்கொண்டு வருவதா? ஓர் இனத்தின் அடிப்படையான விழிப்புணர்ச்சிக்கு வித்தாக இருப்பதே மொழியுணர்ச்சிதான். தேவையில்லாமல் அவ்வுணர்ச்சியில் ஏன் நாம் அடிமைகளாகத் தன்மானமற்றவர்களாக இருத்தல் வேண்டும்? இதுவரை கலந்திருப்பதை விட்டுவிட்டு........ என்ருல் எதுவரை? அவர் மடல் எழுதிய வரையிலா? அல்லது நான் இக்கட்டுரையை எழுதிய அன்றைய வரையிலா? அல்லது நீங்கள் இதைப்படிக்கும் இன்றைய வரையிலா? கலப்பு நிகழ்ச்சிக்கு எல்லேயேது? அதை எல்லேப்படுத்துவது யார்? இனிமேல் கலப்புச்செய்ய வேண்டா எனக் கட்டளேயிடுபவர் எவர்?

ஆகவே காலவகை என்பதற்கு, தனித்தமிழ் வளர்ச்சியுறத் தொடங்கிய இக்காலம் என்பதாகப் பொருள் செய்து கொண்டு, **பழையன கழிதலும்** என்பதற்குக்கடந்த மூவாயிரமாண்டுகளாகத் தமிழ்மொழியில் தொடர்ந்து செய்யப்பெற்ற மொழிக் கலப்பு நீங்கிவரும் நிலே எனப் பொருள் கண்டு, **புதியன புகுதல்** என்பதற்கு இனிப் புதியதாகத் தமிழில் மறுமலர்ச்சி ஏற்படும்படி செய்தல் என விளக்கஞ் செய்து, வழுவல என்பதற்கு, அம்மறுமலர்ச்சியை எவரும் தவறு என்ரே, குற்றம் என்ரே சொல்லாமல் ஏற்றுக்கொண்டுதான் ஆகல் வேண்டுமென்பதாகப் பொருள் கூறி முடித்துக் கொள்க என்று எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன்.

## தென்மொழியின் தனித்தமிழ் வெளியீடுகள்.

பாவலரேறு

### பெருஞ்சித்திரனார்

அவர்களின்

### புதுமுறை இலக்கியங்கள்

| | | |
|---|---|---|
| 1. | எண்சுவை எண்பது | 4-50 |
| 2. | பாவியக்கொத்து (அச்சில்) | 4-50 |
| 3. | பாவியக்கொத்து (2-ஆம் தொகுதி) | (அச்சில்) |
| 4. | ஐயை முதல் பகுதி | 4-00 |
| 5. | ஐயை 2-ஆம் பகுதி | 5-00 |
| 6. | ஐயை (இருபகுதிகளும் இணைந்தது) | 8-50 |
| 7. | கொய்யாக்கனி (மறுபதிப்பு) (அச்சில்) | 6-00 |
| 8. | கற்பனை ஊற்று - கட்டுரைகள் 1 | 4-50 |
| 9. | கற்பனை ஊற்று ,, 2 | (அச்சில்) |
| 10. | பள்ளிப் பறவைகள் - 1 (குழந்தைப் பாடல்கள்-முதல் தொகுதி) | 4-00 |
| 11 | பள்ளிப் பறவைகள் 2-ஆம் தொகுதி | (அச்சில்) |
| 12. | மகபுகுவஞ்சி | 3-00 |
| 13 | அறுபருவத் திருக்கூத்து | (அச்சில்) |
| 14. | கனிச்சாறு முதல் தொகுதி | 15-00 |
| 15. | கனிச்சாறு இரண்டாம் தொகுதி | 11-00 |
| 16. | கனிச்சாறு மூன்றும் தொகுதி | 17-50 |
| 17. | நூறாசிரியம்-முதல் பகுதி | 2-50 |
| 18 | தன்னுணர்வு | 0-75 |
| 19. | இளமை உணர்வுகள் | 1-25 |
| 20. | பாவேந்தர் பாரதிதாசன் (அச்சில்) | 1-50 |
| 21. | இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக் குரிய ஆக்கப்பணிகள் | 0-75 |
| 22. | வாழ்வியல் முப்பது (உரைக்குறிப்புடன்) | 0-75 |

பிற விளக்கங்களுக்கு :

தென்மொழி, சென்னை - 600005, தமிழகம்.

---

**தனித்தமிழ்த் தாளிகைகள் 'தமிழ்ச்சிட்டு' 'தென்மொழி' படியுங்கள்.**



தனிநலம் இன்றித்
தளர்வெதும் இன்றித்
தமிழ்மொழிக் குழைப்பவர் எவரோ-அதைத்
தாயென மதிப்பவர் எவரோ-அவர்
தகுதிஎன் எனினும்
தரம்எது வெனினும்
தம்பியும் அண்ணனும் அவரே! - அவர்
தங்கிட நான்ஒரு சுவரே!

கனிச்சாறு - 2
பாடல்: 68

முன்னம் பறித்த
முழுமைத் தமிழ்நிலத்தைத்
தன்னால் திருப்பித்
தராமல் இருப்பாரேல்
கன்னல் தமிழ்மொழியால்
கட்டுண்டு பாய்ந்தெழுந்தே
இன்னல் விளைப்போமென்
றெச்சரிப்பாய் பூங்குயிலே.

கனிச்சாறு - 2
பாடல்: 18